ஆராய்ச்சி நடத்தப்படுகிறது. பக்கிங்ஹாம் கால்வாயை தூர் எடுப்பதுபற்றியும் அதை அடுத்தே ஒரு பாதையைப் போடவும் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM: Have the Government completed the Cooum Canal Scheme?

MR. DEPUTY SPEAKER: That is not relevant.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தனியாகக் கேள்வி போடவும்.

Overbridges for Madurai.

* 226 *Q.*—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the construction of the two overbridges in Madurai City at the Railway level crossings have been completed; and

(*b*) if not, the probable date by which the works will be completed?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) சுப்பிரமணியபுரத்திலே கட்டப்படுகிற மேம்பாலம் விரைவிலே முடிவடையும். மீனாட்சி மில்ஸ் மேம்பால வேலை துரிதமாக நடைபெறுகிறது. 1973-ஆம் ஆண்டிற்குள் முடிவடையும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், மதுரையிலிருந்து விருதுநகர் போன்ற மற்ற இடங்களுக்குப் போவதற்கான பகுதிகளிலேதான் இந்த சுப்ரமணியபுரம் மேம்பாலமும், மீனாட்சி மில்ஸ்மேம்பாலமும் இருக்கின்றன. இந்த வேலைகள் ஒரு ஆண்டுக்கு மேலாக நடக்கின்றன. ஆகவே இந்த வழியாகப் போக்குவரத்து நடக்காமல் வேறு வழியாகத்தான் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் இந்த மேம்பாலங்களைக் கட்டி முடிக்க 1973-ஆம் ஆண்டு கடைசிவரை ஆகும் என்றால் இடைஞ்சல் ஆகத்தான் இருக்கும். ஆகவே இந்த ஆண்டு முடிவிற்குள்ளாகவாவது இந்த வேலைகளை முடித்துவிடுவதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: சுப்ரமணியபுரம் மேம்பாலம் கிட்டத்தட்ட முடிவடைந்துவிடும் நிலையில் இருக்கிறது என்று சொல்லலாம். மீனாட்சி மில்ஸ் மேம்பாலத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தைக் கவனத்தில் கொண்டு விரைவாக நடவடிக்கை எடுக்கச் சொல்லலாம்.

திரு. த. சோனையா : இந்த மேம்பாலங்கள் கட்டப்படுவதால் இரண்டு தெருக்களில் உள்ள கடைகளுக்கு இடைஞ்சல் இருப்பதாக மகஜர் அனுப்பப் பட்டிருக்கிறது. இந்த மேம்பாலங்களுக்குகீழ் உள்ள இடத்தில் கடைகள் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது, எனவே அப்படிக் கடைகளைக் கட்டினால் வாடகை மூலம் வருமானம் கிடைக்கும். அதைச்செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது ஒரு நல்ல ஆலோசனை. மேம்பாலங்களுக்குக் கீழே கடைகள் வைக்க முடியுமா என்பதைப் பரிசீலிக்கலாம்.

Bridges

* 227 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state the details of the proposals under examination for the improvement of Suchindram bridge on Nagercoil-Cape Comorin route?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தேசிய நெடுஞ்சாலை எண் 47. திருவனந்தபுரம்–கன்னியாகுமரி சாலை மைல் 46/1-ல் உள்ள பாலத்தை சீர் அமைப்பதற்கான பணி 1972-73-ம் ஆண்டு நெடுஞ்சாலைத் திட்டத்தின்கீழ் உள்ளது. பாலத்தின் அமைப்பும் திட்டப் பட்டியலும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, அது ஒரு ஒடுங்கிய அகலமில்லாத பழைய பாலமாக இருப்பதால் போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. எனவே உடனடியாக அதைச் சீரமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த ஆண்டு அது திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கணபதியான்கடவு, ஞாலாங்குளம் பாலம் போன்ற பல்வேறு பாலங்கள் சீரமைக்கப்பட வேண்டிய அவசியத்தில் இருக்கின்றன. இதுவரையில் அவையெல்லாம் கட்டப்படவில்லை. எனவே, இனிமேலாவது ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒவ்வொரு பாலமாகவாவது எடுத்துக் கொண்டு முடிக்க அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை, தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரலாம்.